**செ. கு. எண்:137** **நாள்: 18.09.2016**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 18.9.2016

சிறுபான்மையினரின் நலன்களை பாதுகாக்கவும் அவர்களின் கல்வி மற்றும் பொருளாதார நிலையை உயர்த்தவும் எனது தலைமையிலான அரசு பல்வேறு முன்னோடி திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

ஜெருசலேம் புனித பயணத்திற்காக நிதி உதவி வழங்கப்படுகிறது. இது வரை 2,340 கிருத்துவர்கள் புனிதப் பயணம் மேற்கொண்டுள்ளனர்.

தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கான நிர்வாக மானியம் 45 லட்சம் ரூபாயிலிருந்து ஒரு கோடி ரூபாய் என உயர்த்தி வழங்கப்படுகிறது. ஹஜ் குழுவிற்கான நிர்வாக மானியம் 20 லட்சம் ரூபாயிலிருந்து 30 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறு உலமாக்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர உதவித் தொகை 1,000 ரூபாயிலிருந்து 1,500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட உள்ளது.

சிறுபான்மையினர் நலன் பேணும் வகையில் பின்வரும் புதிய திட்டங்களை செயல்படுத்த நான் உத்தரவிட்டுள்ளேன்.

1. எங்களது தேர்தல் அறிக்கையில் ‘கிருத்துவ தேவாலயங்களுக்கு, பழுதுபார்த்தல் மற்றும் சீரமைத்தல் பணிகளுக்கென அரசின் மானிய உதவி வழங்கப்படும்’ என்ற வாக்குறுதியை அளித்திருந்தோம். அதனை செயல்படுத்தும் விதமாக, கிருத்துவ தேவாலயங்களின் பழுதுபார்ப்பு மற்றும் புனரமைப்புப் பணிகளுக்காக மூன்று லட்சம் ரூபாய் வரை மானியமாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன். இதற்கென இந்த ஆண்டு 1 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

2. அதே போன்று, பள்ளிவாசல்கள், தர்காக்கள் போன்ற வக்ஃப் நிறுவனங்களில் பழுதுபார்ப்பு மற்றும் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு வக்ஃப் வாரியத்திற்கு ஆண்டொன்றுக்கு 60 லட்சம் ரூபாய் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகிறது. எங்களது தேர்தல் அறிக்கையில், ‘மசூதிகள் பழுதுபார்க்கத் தேவையான நிதி உதவி வழங்கும் வகையில், வக்ஃப் வாரியத்தில் தனியே நிதியம் ஏற்படுத்த நிதி உதவி வழங்கப்படும்’ என்ற வாக்குறுதியை அளித்திருந்தோம். அதனை செயல்படுத்தும் விதமாக, பள்ளிவாசல்கள், தர்க்காக்கள் போன்ற வக்ஃப் நிறுவனங்களில் பழுதுபார்ப்பு மற்றும் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு ஒரு தொகுப்பு நிதி (Corpus Fund) உருவாக்கப்படும். இந்த தொகுப்பு நிதிக்கு 3 கோடி ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த நடவடிக்கைகள் மூலம் சிறுபான்மையினரின் வழிபாட்டுத் தலங்கள் பொலிவடைய வழி வகை ஏற்படும்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**